ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ திருமடந்தை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருமடந்தை ॥

## திருநாங்கூர் அரிமேய விண்ணகரம்

‡திரு மடந்தை மண் மடந்தை இருபாலும் திகழத்⋆
தீவினைகள் போய் அகல அடியவர்கட்கென்றும்
அருள்நடந்து⋆ இவ்வேழ் உலகத்தவர் பணிய⋆ வானோர்
அமர்ந்தேத்த இருந்த இடம்⋆ பெரும் புகழ் வேதியர் வாழ்-
தரும் இடங்கள் மலர்கள் மிகு கைதைகள் செங்கழுநீர்⋆
தாமரைகள் தடங்கள்தொறும் இடங்கள்தொறும் திகழ⋆
அருவிடங்கள் பொழில் தழுவி எழில் திகழு நாங்கூர்⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (1)

வென்றி மிகு நரகன் உரம் அதுவழிய விசிறும்⋆
விறல் ஆழித் தடக் கையன் விண்ணவர்கட்கன்று⋆
குன்று கொடு குரை கடலைக் கடைந்தமுதம் அளிக்கும்⋆
குருமணி என்னார் அமுதம் குலவியுறை கோயில்⋆
என்று மிகு பெருஞ்செல்வத்தெழில் விளங்கு மறையோர்⋆
ஏழ் இசையும் கேள்விகளும் இயன்ற பெருங்குணத்தோர்⋆
அன்றுலகம் படைத்தவனே அனையவர்கள் நாங்கூர்⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே (2)

உம்பரும் இவ்வேழ் உலகும் ஏழ் கடலும் எல்லாம்⋆
உண்ட பிரான் அண்டர்கள் முன் கண்டு மகிழ்வெய்த⋆
கும்ப மிகு மத யானை மருப்பொசித்துக்⋆ கஞ்சன்
குஞ்சி பிடித்தடித்த பிரான் கோயில்⋆ மருங்கெங்கும்
பைம்பொனொடு வெண் முத்தம் பல புன்னை காட்டப்⋆
பலங்கனிகள் தேன் காட்டப் படவரவேர் அல்குல்⋆
அம்பனைய கண் மடவார் மகிழ்வெய்து நாங்கூர்⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே (3)

ஓடாதவாள் அரியின் உருவம் அது கொண்டு⋆ அன்-
றுலப்பில் மிகு பெரு வரத்த இரணியனைப் பற்றி⋆
வாடாத வள் உகிரால் பிளந்தவன் தன் மகனுக்கு⋆
அருள் செய்தான் வாழும் இடம் மல்லிகை செங்கழுநீர்⋆
சேடேறு மலர் செருந்தி செழுங்கமுகம் பாளை⋆
செண்பகங்கள் மண நாறும் வண் பொழிலின் ஊடே⋆
ஆடேறு வயல் ஆலைப் புகை கமழு நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே (4)

கண்டவர் தம் மனம் மகிழ மாவலி தன் வேள்விக்⋆
களவில் மிகு சிறு குறளாய் மூவடி என்றிரந்திட்டு⋆
அண்டமும் இவ்வலை கடலும் அவனிகளும் எல்லாம்⋆
அளந்த பிரான் அமருமிடம் வளங்கொள் பொழில் அயலே⋆
அண்டம் உறு முழவொலியும் வண்டினங்கள் ஒலியும்⋆
அருமறையின் ஒலியும் மடவார் சிலம்பின் ஒலியும்⋆
அண்டம் உறும் அலை கடலின் ஒலி திகழும் நாங்கூர்⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மடநெஞ்சே (5)

வாணெடுங்கண் மலர்க் கூந்தல் மைதிலிக்கா⋆ இலங்கை
மன்னன் முடி ஒருபதும் தோள் இருபதும் போய் உதிர⋆
தாணெடுந்திண் சிலை வளைத்த தயரதன் சேய்⋆ என்றன்
தனிச் சரண் வானவர்க்கரசு கருதும் இடம் தடமார்⋆
சேண் இடம் கொள் மலர்க் கமலம் சேல் கயல்கள் வாளை⋆
சென்னெலொடும் அடுத்தரிய⋆ உதிர்ந்த செழு முத்தம்⋆
வாள் நெடுங்கண் கடைசியர்கள் வாரும் அணி நாங்கூர்⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (6)

தீமனத்தான் கஞ்சனது வஞ்சனையில் திரியும்⋆
தேனுகனும் பூதனை தன் ஆர் உயிரும் செகுத்தான்⋆
காமனைத்தான் பயந்த கரு மேனியுடை அம்மான்⋆
கருதும் இடம் பொருது புனல் துறை துறை முத்துந்தி
நாமனத்தால் மந்திரங்கள் நால் வேதம்⋆ ஐந்து
வேள்வியோடாறங்கம் நவின்று கலை பயின்று⋆ அங்-

காமனத்து மறையவர்கள் பயிலும் அணி நாங்கூர்⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (7)

கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்த காளை⋆
காமரு சீர் முகில் வண்ணன் காலிகள் முன் காப்பான்⋆
குன்றதனால் மழை தடுத்துக் குடம் ஆடு கூத்தன்⋆
குலவும் இடம் கொடி மதிள்கள் மாளிகை கோபுரங்கள்⋆
துன்று மணி மண்டபங்கள் சாலைகள்⋆ தூ மறையோர்
தொக்கீண்டித் தொழுதியொடு மிகப் பயிலும் சோலை⋆
அன்றலர்வாய் மதுவுண்டங்களி முரலும் நாங்கூர்⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (8)

வஞ்சனையால் வந்தவள் தன் உயிருண்டு⋆ வாய்த்த
தயிர் உண்டு வெண்ணெய் அமுதுண்டு⋆ வலி மிக்க
கஞ்சன் உயிர் அதுவுண்டிவ்வுலகுண்ட காளை⋆
கருதும் இடம் காவிரி சந்தகில் கனகம் உந்தி⋆
மஞ்சுலவு பொழிலூடும் வயலூடும் வந்து⋆
வளம் கொடுப்ப மா மறையோர் மா மலர்கள் தூவி⋆
அஞ்சலித்தங்கரி சரண் என்றிறைஞ்சும் அணி நாங்கூர்⋆
அரிமேய விண்ணகரம் வணங்கு மட நெஞ்சே (9)

‡சென்று சின விடையேழும் படவடர்த்துப்⋆ பின்னை
செவ்வித் தோள் புணர்ந்துகந்த திருமால் தன் கோயில்⋆
அன்றயனும் அரன் சேயும் அனையவர்கள் நாங்கூர்⋆
அரிமேய விண்ணகரம் அமர்ந்த செழுங்குன்றை⋆
கன்றி நெடு வேல் வலவன் மங்கையர் தம் கோமான்⋆
கலிகன்றி ஒலி மாலை ஐந்தினொடு மூன்றும்⋆
ஒன்றினொடும் ஒன்றும் இவை கற்று வல்லார்⋆ உலகத்-
துத்தமர்கட்குத்தமர் ஆய் உம்பரும் ஆவர்களே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥